**<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**

**<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>**

**<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>**

அ.சா. 5 தேதி.03.09.2024

| SC. No. | 32/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | எ. ராஜ்குமார் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் கழுக்காணி முட்டம், பாடசாலை தெருவில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 முதல் 4 சாட்சிகளையும், மற்ற சாட்சிகளையும் எனக்கு தெரியும். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக நான் ஓட்டுநராக சென்னைக்கு சென்றிருந்த போது எனது ஊரை சேர்ந்த ஒருவர் எனக்கு போன் செய்து எங்கள் வீட்டில் இருந்து 3வது வீட்டில் இருக்கும் வைத்தியநாதன் மனைவியை அவரது எதிர் வீட்டை சேர்ந்த மகாலிங்கம் என்பவர் தாக்கிவிட்டதாகவும் அதில் காயம்ப்பட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் அவரை சிகிச்சைக்காக சேர்த்துள்ளதாகவும் கூறினார். நான் மறுநாள் தான் வீட்டிற்கு வந்தேன். வைத்தியநாதனிடம் எனக்கு பேச்சி வார்த்தை இல்லாததால் நான் மருத்துவ மனைக்கு சென்று அவரது மனைவியை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது நான ஊரில் இல்லை என்றால் சரிதான். யார் யார் அடித்து கொண்டார்கள், எதனால் அடித்துக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. இதுவரை என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை. சம்மன் வந்ததால் வந்தேன். வழக்கு சம்பந்தமாகவும் எந்த விபரமும் தெரியாது. சம்பவம் பற்றி யார் சொன்னது என்று ஞாபகம் இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,**
**முதன்மை உதவி அமர்வு நீதிபதி.**

அ.சா. 6 தேதி.03.09.2024

| SC. No. | 32/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | ஐயப்பன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் கழுக்காணி முட்டம், பாடசாலை தெருவில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 3ஆம் எதிரியை எனக்கு தெரியும், மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 முதல் 5 சாட்சிகள் எனது ஊரை சேர்ந்தவர்கள் தான். சுமார் 1 முதல் 1 1/2 வருடத்திற்கு முன்பாக நான் கும்பகோணத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டு இரண்டு நாட்கள் கழித்து ஊருக்கு வந்த போது எனது தெருவை சேர்ந்த அக்கம் பக்கத்தினர் சண்டை போட்டதாக கூறினார்கள். எனது 3வது வீட்டை சேர்ந்த மகா லிங்கத்திற்கும் அவரது எதிர் வீட்டை சேர்ந்த வைத்தி வீட்டிற்கும் சண்டை நடந்ததாக கூறினார்கள். அதில் யாருக்கு என்ன காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் விசாரிக்கவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை

எதிரிகளில் மகாலிங்கம் எங்கள் வீட்டில் அருகில் உள்ளதால் அவரை மட்டும் தான் தெரியும். சண்டை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் அப்போது நான் ஊரில் இல்லை. யார் யாருக்கு இடைய சண்டை என்று எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை. தற்போது சாட்சி சம்மன் கொடுத்து வர சொன்னதால் வந்தேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி.

அ.சா. 7 தேதி.03.09.2024

| SC. No. | 32/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | பிரகாஷ் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் கழுக்காணி முட்டம், பாடசாலை தெருவில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் அ.சா.1 முதல் 6 நபர்களை எனக்கு தெரியும். 1ஆம் எதிரியை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் 1 முதல் 1 1/2 வருடம் முன்பாக நான் மயிலாடுதுறை பேருந்து நிலைய வண்டி ஸ்டேன்டில் இருந்த போது அங்கு இருந்தவர்கள் வைத்தி குடும்பத்தார் அடிப்பட்டு மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் சிகிச்சையில் இருப்பதாக கூறினார்கள். நான் மருத்துவ மனைக்கு சென்று பார்த்த போது அங்கு வைத்தியும் அவரது மனைவி சரஸ்வதியும் சிகிச்சையில் இருந்தார்கள். நான் அவர்களிடம் யாரால் பிரச்சனை என்று கேட்கவில்லை. திரும்ப வேலைக்கு வந்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை

நான் மருத்துவ மனையின் முன் வரவேற்பு அறையில் வைத்தியை பார்த்தேன். எனக்கு சண்டை பற்றி நேரடியாக தெரியாது. எனக்கு மயிலாடுதுறை பேருந்து நிலைய வண்டி ஸ்டேன்டில் சொல்லி தான் சண்டை பற்றி கேள்விபட்டேன். எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.